IPO No:- 09F 225210

பதிவுத் தபால் ஒப்புதல் அட்டையுடன்

அனுப்புநர்

M.சிங்கத்தேவர்
த/பெ. மூக்கத்தேவர்
பூமயிலம்மாள் காம்பவுண்டு
13-வது தெரு, பெரியசாமிநகர்,
அவனியாபுரம்,
மதுரை - 625 012.

பெறுநர்

**POWERGRID CORPORATION OF INDIA LTD.,**
(A Government of India Enterprise)
Southern Region Transmission Systerm – I
Pragati Mahalakshmi, South Block (2nd & 3rd Block)
No.62, 3rd Cross, MEI Road, Industrial Suburb, Yeshwantpur,
Bangalore – 560 022.
Tele.: 080-2371543, FAX 080-23571541

அய்யா,

பொருள்: மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் பூசலபுரம் கிராமம் புல எண்கள் 47-ல் என்னுடைய நிலத்தில் “EB Tower” ஊன்றியிருப்பதை அகற்றக் கோரி சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தொடர்பாக.

---

மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் பூசலபுரம் கிராமத்தில் புல எண்கள். 47-ல் சர்வேயில் என்னுடைய நிலங்கள் உள்ளன. நான் பிழைப்பு கருதி சுமார் ஐம்பது (50) வருடங்களுக்கு மேல் மதுரையில் வசித்து வருகிறேன். என்னுடைய பூர்வீக பூமியான சர்வே எண். 47/ ல் “EB Tower” ஊன்றியிருப்பதாக என்னுடைய உறவினர்கள் மற்றும் பக்கத்து நில உரிமையாளர்கள் தற்பொழுது தான் எனக்குத் தகவல் தெரிவித்தார்கள்.

க.வி.பா.

நான் அவர்கள் கூறிய தகவலின்படி என்னுடைய நிலத்தை பார்வையிட்ட போது EB Tower ஊன்றப்பட்டு EB Tower–ல் A 87-D, A.7-H என்று எண். குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நேரில் பார்த்து தெரிந்து கொண்டேன்.

என்னுடைய நிலம் பட்டா நிலம் ஆகும். (ரயத்து புன்செய்) என்னுடைய பட்டா நிலத்தில் "EB Tower" ஊன்றியது சட்டப்படி தவறாகும். அதிலும் பட்டா உரிமையாளரின் நிலத்தில் எந்தவிதமான முன்னறிவிப்போ, சட்டப்படியான முன்னறிவிப்பு நோட்டீஸ் வழங்காமல் மற்றும் எந்தவிதமான தகவலும் தெரிவிக்காமல் சட்டப்படியான துறை ரீதியாக நவடிக்கைகள் மேற்கொள்ளாமல் எனக்குத் தெரியப்படுத்தாமல், என்னுடைய சம்மதத்தையோ அல்லது மறுப்பையோ கேட்காமல் என்னுடைய நிலத்தில் "EB Tower" (EB Tower–எண். A 87-D, A.7-H) ஊன்றி இருப்பது முறைப்படி சட்டத்திற்கு எதிரான செயலாகும். எனவே நான்சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு உரிய சூழலைத் தாங்களே உருவாக்கி இருக்கிறீர்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே நான் சட்டத்திற்குள் செல்வதற்கு முன் என்னுடைய நிலத்தில் ஊன்றியிருக்கின்ற EB Tower– ஐ பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

நான் என்னுடைய நிலத்திற்கு உரிய ஆவணங்களை தங்களுக்கு சமர்ப்பித்து இத்துடன் இம்மனுவுடன் இணைத்து அனுப்பி உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

என்னுடைய நிலத்தில் EB Tower செல்லும் பொழுது என்னுடைய நிலத்தின் விலை மதிப்பு குறைகிறது. மேலும்விலை மதிப்பு குறைவதுடன் என்னுடைய நிலத்திற்கு உரிய மதிப்பே முற்றிலும் மாறிவிடும் சூழ்நிலையில் எனக்கு பேரிழப்பு ஏற்படுகின்றது.

எனவே என்னுடைய பேரிழப்பைத் தவிர்க்கும் பொருட்டு என்னுடைய நிலத்தில் EB Tower (A 87-D, A.7-H) ஊன்றி இருப்பதை பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு தங்கள் எனக்கு நியாயம் வழங்கவில்லை எனில் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இக்காலக் கட்டத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

இடம் – மதுரை

தேதி - 18.01.2014

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

மு.தி.ஙி.கந்தேலன்

**இணைப்பு**

1) எஸ்.எல்.ஆர்.நகல் தாள் 1
2) பட்டா பாஸ் புத்தக நகல் 2 தாள்
3) ரூ.10/-க்கான இந்தியன் போஸ்டல் ஆர்டர் இணைக்கப்பட்டுள்ளது.
   ( Post Order No.09F 225210)

**நகல்**

1) பொதுத்தகவல் அலுவலர் மற்றும் சேர்மன் அவர்கள்
   தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணாசாலை, சென்னை
   தமிழ்நாடு -600 002.

2) உயர்திரு. மேற்பார்வை பொறியாளர் அவர்கள்,
   பொது நிர்மான வட்டம், கோ.புதூர், மதுரை 625 007.

3) பொதுத் தகவல் அலுவலர் & மேற்பார்வை பொறியாளர் அவர்கள்
   தமிழ்நாடு மின்சார வாரியம், தும்மக்குண்டு
   உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

அவ்வாறு தங்கள் எனக்கு நியாயம் வழங்கவில்லை எனில் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இக்காலக் கட்டத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

இடம் – மதுரை

தேதி - 18.01.2014

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

**இணைப்பு**

1) எஸ்.எல்.ஆர்.நகல் தாள் 1
2) பட்டா பாஸ் புத்தக நகல் 2 தாள்
3) ரூ.10/-க்கான இந்தியன் போஸ்டல் ஆர்டர் இணைக்கப்பட்டுள்ளது.
( Post Order No.09F 225210)

**நகல்**

1) பொதுத்தகவல் அலுவலர் மற்றும் சேர்மன் அவர்கள்
தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணாசாலை, சென்னை
தமிழ்நாடு -600 002.

2) உயர்திரு. மேற்பார்வை பொறியாளர் அவர்கள்,
பொது நிர்மான வட்டம், கோ.புதூர், மதுரை 625 007.

3) பொதுத் தகவல் அலுவலர் & மேற்பார்வை பொறியாளர் அவர்கள்
தமிழ்நாடு மின்சார வாரியம், தும்மக்குண்டு
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.